திறக்க முடியாத சூழ்நிலையில்தான் ஆணையாளருக்கு வருகிறது. ஆணையாளர் அதைப் பரிசீலித்து, அதில் என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து, வாய்ப்புகள் இருக்கிறபட்சத்தில் தான், அவர்கள் கடையைத் திறக்க உத்தரவிட முடியும். அந்த அடிப்படையிலேதான் அந்த மனுக்களெல்லாம் ஆய்விலே இருக்கும் என்பதுதான் உண்மையான கருத்தாக இருக்க முடியும் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதியில் இருக்கிற கடைகளுக்கு நடமாடும் அங்காடிகள் கோரியுள்ளார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மலைப் பகுதியில் வாழ்கிறவர்களுக்கு நடமாடும் அங்காடிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்கிற உத்தரவைப் பிறப்பித்துள்ளார்கள். அந்த உத்தரவின் அடிப்படையில், ஆய்வுகள் மேற்கொண்டு, அவர்களுக்கெல்லாம் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 492, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

492—

பால் குளிரூட்டும் நிலையம்

***17396—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மானாமதுரை தொகுதி, இளையான்குடியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று சிவகங்கையிலும் மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்புப் பால் குளிர்விப்பான் 19 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள காளையார்கோவில் ஒன்றியம், பருத்திக்கண்மாயிலும் செயல்பட்டு வருகின்றன. இளையான்குடியில் உள்ள மொத்த சங்கங்கள் 22. தினசரி பால் உற்பத்தி 100 லிட்டர். ஆகவே, பால் உற்பத்தி அதிகரிக்கும்பட்சத்தில் மட்டுமே இளையான்குடி பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அல்லது தொகுப்புப் பால் குளிர்விப்பான் அமைக்க இயலும் என்பதால், தற்போது இளையான்குடியில் பால் குளிர்விப்பான் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தினுடைய ஒப்பற்ற தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற வாழும் வள்ளல், வாழும் மனித தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மானாமதுரை தொகுதி, இளையான்குடி தாலுகா 55 ஊராட்சிகளையும், ஒரு பேரூராட்சியையும் உள்ளடக்கிய பகுதி. இது முழுக்க, முழுக்க கிராமங்களை உள்ளடக்கிய பகுதி. இங்கேயிருக்கின்ற மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வேறு தொழில்கள் ஏதுமில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறுகிற வகையில், அந்தப் பகுதியிலே ஒரு பால் குளிரூட்டும்*

நிலையம் அமைத்துத் தந்தால், அங்கே பால் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இளையான்குடியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத்தர ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியில் உள்ள மொத்த சங்கங்கள் 16; மகளிர் சங்கம் 1; தினசரி பால் உற்பத்தி 1,421 லிட்டர்; தினசரி ஒன்றியத்திற்கு அனுப்பப்படும் பால் 1,091 லிட்டர். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான மானாமதுரையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சொந்த இடத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தொகுப்புப் பால் குளிர்விப்பான் அமைப்பது தொடர்பான கருத்துரு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் பரிசீலனையில் உள்ளது. இதன்மீது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணை பெற்று தொகுப்புப் பால் குளிர்விப்பான் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியில் பால் குளிர்விப்பான் அமைத்துத் தரப்படுமென்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றியினைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 493, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.